பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 10 2023 7 15

திங்கட்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ராஜஸ்தான் மாநிலத்தில் 7 ஆயிம் கோடி ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டப் பணிகளையும், மத்தியப்பிரதேசத்தில் 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய திட்டங்களையும் தொடங்கி வைக்கிறார்.

2. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு முழுவதும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3. புதுதில்லியில் நடைபெற்ற பிஜேபி மத்திய தேர்தல் குழுவின் கூட்டத்தில் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநில பிஜேபி வேட்பாளர்கள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்

4. விண்வெளித்துறையில் சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு தமிழக அரசின் சார்பில் சென்னையில் இன்று பாராட்டு விழா நடைபெறுகிறது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் முதல் முறையாக இந்தியா துப்பாக்கிச் சுடும் பிரிவில் 22 பதக்கங்களை வென்றுள்ளது.

---இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி வைப்பதோடு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

நான்காயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் மேஷானா - பட்டிண்டா – குருதாஸ்பூர் இடையே அமைக்கப்பட்டுள்ள எரிவாயு குழாய் திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

அபூ சாலையில் இந்துஸ்தான் பெட்ரோலிய கழக நிறுவனம் அமைத்துள்ள சமையல் எரிவாயு ஆலையையும் அவர் திறந்து வைக்கிறார்.

மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் 19 ஆயிரத்து 260 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

தில்லி – வதோதரா இடையே அமைக்கப்பட்டுள்ள அதிவிரைவுச் சாலையையும் பிரதமர் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஐந்துக்கும் மேற்பட்ட சாலைத் திட்டங்களுக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்ட உள்ளதாக மத்திய அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் உள்ள காந்தியடிகளின் நினைவிடமான ராஜ்காட்டில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளனர்.

அங்கு நடைபெற உள்ள சர்வமத பிரார்த்தனையிலும் இவர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

சென்னையில் உள்ள காந்தியடிகளின் சிலைக்கு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர்.

காந்தியடிகளின் பிறந்தநாளை முன்னிட்டு காதி விற்பனை நிலையங்களில் கதர் ஆடைகளின் சிறப்பு விற்பனை இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

காந்தி ஜெயந்தி இன்று கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், தேசப்பிதா மகாத்மா காந்தி, அகிம்சை வழியில் வாழ்ந்து காட்டியவர் என்றும், மகளிருக்கான அதிகாரம், சுயசார்பு,

விவசாயிகளின் உரிமைகள், தீண்டாமை ஒழிப்பு, தூய்மை உள்ளிட்டவற்றுக்காக அயராது பாடுபட்டவர் என்று கூறியுள்ளார்.

எழுத்தறிவை ஏற்படுத்தி, சமூக வேறுபாடுகளை களைய வேண்டும் என்று வலியுறுத்திய தேசப்பிதா, அகிம்சை வழியில் நாட்டு விடுதலைக்காக போராடி முன்னுதாரணமாக திகழ்ந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள செய்தியில், காந்தியடிகளின் உண்மை மற்றும் அகிம்சை வழிமுறைகள் நாட்டிற்கு விடுதலை பெற்றுத்தந்ததாக கூறியுள்ளார்.

காந்தியடிகளின் சிந்தனையை பின்பற்ற வேண்டும் என குடியரசு துணைத்தலைவர் நாட்டு மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

பிஜேபி மத்திய தேர்தல் குழுவின் கூட்டம் நேற்று புதுதில்லியில் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் மூத்த தலைவர்களான திரு. நரேந்திர மோடி, திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், கட்சியின் தலைவர் திரு. ஜே.பி. நட்டா உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

வரவிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ள பிஜேபி வேட்பாளர்கள் இந்தக் கூட்டத்தில் இறுதிப்படுத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஆயத்தப்பணிகள் திருப்திகரமாக உள்ளது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜெய்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு ராஜீவ் குமார், தேர்தல் ஆணையத்தின் முழு அமர்வு கடந்த மூன்று நாட்களாக ஆய்வு செய்தபின் இதனை தெரிவித்திருப்பதாக கூறினார்.

இந்த தேர்தலில் இளைஞர்களும், பெண்களும் அதிக அளவில் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

21 லட்சத்து 90 ஆயிரம் புதிய வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

51 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் பெரும்பாலானவை கிராமப்புறங்களில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து வாக்குச்சாவடிகளும் வெப் கேமரா மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஜஸ்தானில் 200 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அங்கு கூடுதல் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு ராஜீவ் குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை இந்திய மொழிகளில் கொண்டுவர வேண்டும் என மத்திய அமைச்சர் டாக்டர் திரு ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய மொழிகள் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், கல்வி கற்பதற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பு பின்பற்றப்பட்டு வந்த, ஆங்கிலேய அரசின் கல்விக்கொள்கை, ஆங்கிலம் கற்றால் மட்டுமே வாழ்வில் உயர முடியும் என்ற தவறான கருத்தை நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியதாக கூறினார்.

இந்திய மொழிகளை அறிவியல் தொழில்நுட்ப படிப்புகளுக்கு கொண்டுவருவதற்கு ஆக்கப்பூர்வமான வழிவகைகளை காண வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆங்கிலத்தை அதிக அளவில் பயன்படுத்தாத மாணவர்கள் தங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்யும் வகையில், மொழி கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

முன்னாள் பிரதமரும், விடுதலைப் போராட்ட வீரருமான லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு தில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் தலைவர்கள் மரியாதை செலுத்த உள்ளனர்.

1964ஆம் ஆண்டு முதல் 1966ஆம் ஆண்டு வரை 3 ஆண்டுகள் பிரதமராக இருந்தவர் சாஸ்திரி.

பாரத ரத்னா விருது பெற்ற அவர், நாட்டுக்கு ராணுவ வீரர்கள் எவ்வளவு முக்கியமோ, அதே போல் விவசாயிகளும் முக்கியம் என்று முழங்கியவர்.

நாட்டின் கல்வி வளர்ச்சிக்காகவும், மகளிரின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர் லால்பகதூர் சாஸ்திரி என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விண்வெளித் துறை விஞ்ஞானிகளுக்கு தமிழக அரசின் சார்பில் சென்னையில் இன்று பாராட்டு விழா நடைபெறுகிறது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று காலை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 10.30 மணிக்கு இதற்கான விழா நடைபெறுகிறது.

இந்த விழாவில் இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. கே. சிவன், சந்திரயான் திட்ட முன்னாள் இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை மற்றும் சந்திரயான்3-ன் திட்ட இயக்குநர் திரு. வீரமுத்துவேல், ஆதித்யா எல்-1 விண்கல திட்ட இயக்குநர் திருமதி நிகர் ஷாஜி உள்ளிட்ட 9 விஞ்ஞானிகள் பாராட்டப்பட உள்ளனர்.

முதல் முறையாக இந்த நிகழ்ச்சியை பள்ளி, கல்லூரி மாணவர்கள் நேரலை இணைப்பில் காண அவர்களுக்கு மாநில அரசு வாட்ஸ்அப் மூலம் தகவலை அனுப்பியுள்ளது.

<<<<>>>>

தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 525 கிராமங்களில் இன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளில் ஆண்டுக்கு நான்கு நாட்கள் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன.

அதனை மாநில அரசு 6ஆக உயர்த்தியது. காந்தியடிகளின் பிறந்தநாளான இன்று நடைபெற உள்ள கிராம சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதமர் ஊரக குடியிருப்பு திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஜல்ஜீவன் திட்டம், கிராம ஊராட்சி தணிக்கை அறிக்கை குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

கிராம ஊராட்சியின் வரவு செலவு கணக்கு விவரங்கள், ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், பணிகள், அதனால் பயன்பெறும் பயனாளிகள் ஆகியோர் குறித்த விவரங்கள் கையடக்க பிரதியாக அனைத்து வீடுகளுக்கும் வினியோகம் செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில் அப்பாவி மாணவர்கள் 2 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக 4 பேரை சிபிஐ காவல்துறையினர் கைது செய்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.

சவுரா சந்தர்பூரில் நேற்று இவர்களை மாநில அரசின் காவல்துறை, ராணுவத்தின் உதவியுடன் சிபிஐ குழுவினர் கைது செய்ததாக சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

இரு மாணவர்களும் கொல்லப்பட்ட பிறகு இவர்கள் தலைமறைவாக இருந்ததாகவும், ஆனால் அவர்கள் நீண்ட நாட்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தர மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

யுக்ரைனில் இருந்து ரஷ்யாவுடன் இணைத்துக்கொள்ளப்பட்ட நான்கு பகுதிகளில், வளர்ச்சிப் பணிகளை முழுவீச்சில் ரஷ்யா மேற்கொள்ளும் என்று அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

**Donetsk, Kherson** உள்ளிட்ட இந்தப் பகுதிகளை ரஷ்யா சர்வதேச நடைமுறைகளின்படி இணைத்துக்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே இந்தப் பகுதியில் கடந்த மாதம் நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்கள் ரஷ்யாவுடன் இணைவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளதாகவும் திரு. புடின் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தத் தேர்தலை ஐக்கிய நாடுகள் சபையும், யுக்ரைன் நாட்டுக்கு ஆதரவு அளித்து வரும் நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை.

<<<<>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 13 தங்கம், 21 வெள்ளி, 19 வெண்கலம் உட்பட மொத்தம் 53 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் தொடர்ந்து 4வது இடத்தில் நீடிக்கிறது.

இப்போட்டியின் 8வது நாளான நேற்று 3 தங்கம், 7 வெள்ளி, 5 வெண்கலம் உட்பட 15 பதக்கங்களை இந்தியா கைப்பற்றியது.

தடகளத்தில் ஒரு உலக சாதனையுடன் 2 தங்கப் பதக்கங்களை இந்தியா வென்றது.

முதல் முறையாக துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா மிகச் சிறப்பாக செயல்பட்டு 22 பதக்கங்களைக் கைப்பற்றியது. அதில் 7 பதக்கம் தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

மூவாயிரம் மீட்டர் மும்முறை தாண்டும் போட்டியில் அவினாஷ் முகுந்த் 8 நிமிடம் 19 புள்ளி 5 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கம் வென்றது மிகப்பெரிய சாதனையாகும்.

ஆடவருக்கான குண்டு எறிதல் போட்டியில் தேஜிந்தர்பால் சிங் 20 புள்ளி மூன்று ஆறு மீட்டர் தூரம் எறிந்து தங்கப்பதக்கம் வென்றார்.

**<<<<The End>>>>**